மீண்டும் சகஜ நிலை திரும்பிய பின்பும் பேருந்துகள் இல்லாததால் இப்போது அந்த மக்கள் அவதியுறுகிறார்கள். ஆகையினால், உடனடியாக அரசு இதில் கவனம் செலுத்தி, கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட அனைத்து வழித்தடங்களிலும் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. இருந்தாலும், உண்மையைச் சொல்ல வேண்டிய அவசியமான கட்டத்தில் நான் இருக்கிறேன். கடந்த 5 ஆண்டு ஆட்சிக்காலத்தில் புதிதாக ஓட்டுநரோ, நடத்துநரோ ஒருவர்கூட பணியமர்த்தப்படவில்லை. அப்படி பணியமர்த்தப்படாத காரணத்தினால், பணி ஓய்வு பெறுகின்ற சூழல் ஏற்படுகின்றபோது, தேவையான ஓட்டுநர்கள், நடத்துநர்கள் இல்லாமல் கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பல பேருந்துகளை நிறுத்திவிட்டு சென்றுவிட்டார் என்பதுதான் உண்மையான செய்தி. கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகளைப் படிப்படியாக இயக்குவது சம்பந்தமாக நாங்கள் மேலாண்மை இயக்குநர்களுக்கு அறிவுரை வழங்கியதன் அடிப்படையில் அவை இயக்கப்படுகின்றன. எனவே, இதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயபாஸ்கர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, அப்படி கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகள் இன்னும் ஏதாவது இயக்கப்படாமல் இருந்தால் நிச்சயமாக அவற்றை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

18—

குடமுழுக்கு

***7544—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஜனவரி 12]

(அ) திருவிடைமருதூர் தொகுதி, நாச்சியார்கோவில் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, நாச்சியார்கோவில் திருக்கோயிலின் பணிகள் ரூ.12 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு, 8 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் மகிழ்ச்சியடைகின்ற வகையில் 3 மாத காலத்திற்குள்ளாக திருப்பணிகள் முடிவுபெற்று, குடமுழுக்கு நடைபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தலைமகன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், திருப்பூர் (தெற்கு) சட்டமன்ற உறுப்பினர் கேள்வி கேட்டவுடன், இல்லையென்று சொல்லாமல் அள்ளித்தந்து, திறப்பு விழாவிற்கும் நான் வருகிறேன் என்று சொன்ன மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.*

என்னுடைய திருவிடைமருதூர் தொகுதியில், நாச்சியார்கோவில் என்ற ஊரில் ராமநாதசுவாமி திருக்கோயில் உள்ளது. இது பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட திருக்கோயில். 2006 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது. கிட்டத்தட்ட 17 ஆண்டுகளாகின்றன. அங்கு குடமுழுக்கு நடத்தப்பட வேண்டுமென்ற பக்தர்களுடைய கோரிக்கையை தொடர்ந்து சொல்லியவண்ணம் வந்தேன். இல்லையென்று சொல்லும் மனம் இல்லாதது இந்த அரசு;

[2023 ஜனவரி 12

இன்னும் 3 மாதங்களில் குடமுழுக்கு நடைபெறும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி அமைய இருக்கிற அந்தத் திருக்கோயிலில் மடப்பள்ளி, வௌவால் நத்தி மண்டபம் ஆகியன பழைய அமைப்பு முறையாக இருக்கிறது. அதை கான்கிரீட் கட்டடமாக கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறு பரிந்துரை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நாச்சியார்கோவிலில் உள்ள திருக்கோயில், ராமநாதசுவாமி குடும்பத்தோடு அருள்பாலிக்கிற கோயில். எனவே, குடும்பத்தோடு பக்தர்கள் வந்து செல்ல வசதியாக அந்தத் திருக்கோயிலில் பயணியர் தங்கும் விடுதி ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

ஆயிரம் ஆண்டுகள் கடந்த பழமைவாய்ந்த கோயில்களுக்கெல்லாம் குடமுழுக்கு நடத்த 100 கோடி ரூபாயை ஒதுக்கித்தந்த எங்களது மதிப்புமிகு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நவக்கிரக கோயில்கள் அதிகமுள்ள தொகுதி எனது திருவிடைமருதூர் தொகுதி. சூரியனார்கோயில், கஞ்சனூர் போன்ற திருக்கோயில்கள் உள்ளன. எனது தொகுதி மக்கள் பழனிக்குச் செல்கிறார்கள். பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் கூடியவிரைவில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாக செய்தி அறிந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களே, தமிழாய் வாழ்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆளுகையில், அங்கு தமிழில் குடமுழுக்கு நடைபெறுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஜனவரி 12]

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கோரிய பக்தர்கள் தங்கும் விடுதி குறித்து ஆய்வு செய்து, அதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின் நிச்சயம் கட்டித் தரப்படும்.*

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தஞ்சாவூரிலிருந்து நேராக பழனிக்குச் சென்றுவிட்டார். இருந்தாலும் சென்றவரைத் திருப்பி அழைக்காமல், அவருடன் சேர்ந்து நானும் பயணிக்கிறேன். பழனியைப் பொறுத்தளவில் 27 ஆம் தேதி குடமுழுக்கு விழா நடக்கவிருப்பதாக அறிவிக்கப்பெற்றிருக்கிறது. எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு முழுக்க முழுக்க தமிழிலேயே குடமுழுக்கு விழா பத்திரிகையை அச்சிட்ட ஆட்சி, தமிழ் வளர்க்கின்ற ஆட்சி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்லாமல், பழனி முருகன் கோயிலில் தமிழின் பெருமையைப் பறைசாற்றுகின்ற வகையில், நூற்றுக்கும் மேற்பட்ட ஓதுவார்களை வைத்து, தமிழிசை வேத மந்திரங்களை ஒலிக்க உத்தரவிட்டிருக்கிற ஆட்சி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றோரெல்லாம் நடந்தே சென்று தமிழை வளர்த்தார்கள் என்று வரலாற்றிலே சொல்வார்கள். அமைதியாக உட்கார்ந்துகொண்டு உத்தரவிட்டு, தமிழை வளர்க்கின்ற ஓர் உன்னதத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்பதை நிரூபிக்கின்ற வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் தேவாரமும், திருவாசகமும் அனைத்துத் திருக்கோயில்களிலும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், நூற்றுக்கும் மேற்பட்ட ஓதுவார்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். அனைத்துத் திருக்கோயில்களிலும் திருமூலத்திற்கு நிகரான வேதமந்திரங்கள் ஓதப்படுகின்ற ஆட்சி, தமிழ் வளர்க்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலிருக்கின்ற ஆட்சி என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்துகொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பழனி கோயில் குடமுழுக்கு விழாவில், ஆகம விதிகளுக்குட்பட்டு, வேதமும் ஓதப்படும், தமிழ் மூலமந்திரங்களும் ஓதப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2023 ஜனவரி 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவக்கிரகத் தலங்களில் ஒன்றான சுக்கிரன் ஸ்தலம் கஞ்சனூர். கஞ்சனூர் திருக்கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்று இருபது ஆண்டுகளுக்கும் மேலாகிறது. அது பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்ற திருக்கோயில். அந்தத் திருக்கோயிலுக்கு 2 தேர்கள் இருந்தன. முன்னர் நடைபெற்ற தேரோட்டம், தற்போது நடைபெறவில்லை. ஓடாத திருவாரூர் தேரை ஓடவைத்த நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி தொடர்கின்ற காரணத்தால், கஞ்சனூர் கோயிலில் மீண்டும் தேரோட்டம் நடைபெறுமா என அறிய விரும்புகிறேன். மேலும், அந்தத் திருக்கோயிலுக்கு செயல் அலுவலர் இல்லை. செயல் அலுவலரை நியமித்துத் தருவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விரைவில் மகாமகத் திருவிழாவர இருக்கிறது நவக்கிரகக் கோயில்கள் அதிகமுள்ள பகுதி கும்பகோணம் பகுதி. எப்படி 100 கோடி ரூபாயை ஒதுக்கி அனைத்து கோயில்களுக்கும் உதவியுள்ளார்களோ, அதேபோன்று நவக்கிரகக் கோயில்களைப் புதுப்பித்து, மகாமகத் திருவிழா சிறப்பாக நடைபெறுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு நிதி ஒதுக்கி, அந்தத் திருவிழாவைச் சிறப்பாக நடத்த அனுமதி தருவாரா, நிதி தருவாரா என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஞ்சனூர் அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில் என்பது 2006 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்ற திருக்கோயில். அந்தத் திருக்கோயிலுக்கு தற்போது தொல்லியல் துறை மற்றும் மண்டல வல்லுநர் குழு, மாநில வல்லுநர் குழு ஒப்புதல் பெறப்பட்டு, போதிய நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, வெகுவிரைவில் திருப்பணிகள் ஆரம்பிக்கப்படும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, ஓடாத திருவாரூர் தேரை அன்றைக்கு ஓடவைத்தவர் தலைவர் கலைஞர் என்பதில்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 12]

மறுப்பேதும் யாரும் கூற முடியாது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, சத்தமில்லாமல், 18 ஆண்டுகள் ஓடாமல் இருந்த இராமநாதபுரம், இராமநாதசுவாமி திருக்கோயில் தங்கத் தேரை ஓடவைத்த முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சமயபுரம் திருக்கோயிலில் 13 ஆண்டுகள் ஓடாமல் இருந்த தங்கத் தேரை ஆட்சிப் பொறுப்பேற்ற இந்தக் குறுகிய காலத்தில் ஓடவைத்துக் காட்டியவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், திருத்தணியில் 12 ஆண்டுகள் ஓடாமல் இருந்த தங்கத் தேரை, திருத்தணி தணிகை முருகனைச் சுற்றி வலம் வரச் செய்தவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஓடாத திருத்தேர்களை ஓடவைத்தும், புதிதாகத் தேவைப்படுகின்ற திருத்தேர்களையும் ஓடவைத்திருக்கின்ற தேர்ப்பாகன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, கூடிய விரைவில் அவர் கோரிய அந்தத் திருக்கோயிலினுடைய திருத்தேர்ப் பணிகளும் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம்

***17820—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, அப்பேடு கிராமத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?